சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

**Case No. COS.3/2024**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03ம் நாள் புதன்கிழமை

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.1இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஷ்ணு | தொழில் | கிளை மேலாளர்,<br>பேங்க் ஆப் பரோடா, ஆரணி கிளை. |
| தந்தை பெயர் | புருஷோத்தமன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 39 |

**03.09.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணி புரிகிறேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 19.12.2020 தேதியிட்ட கடன் விண்ணப்பம் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி தரப்பில் எழுதி கொடுக்கப்பட்ட 08.01.2021 தேதியிட்ட கடனுறுதிசீட்டு அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.01.2021 தேதியிட்ட பொதுவை அடமான ஒப்பந்தம் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.01.2021 தேதியிட்ட லெட்டர்ஆப் காரண்டி **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.01.2021 தேதியிட்ட டிராப்ட் அண்டர்டேக்கிங் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.01.2021 தேதியிட்ட லெட்டர் ஆப் கன்டினியூங் செக்யூரிட்டி **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.08.2023 தேதியிட்ட திருவண்ணாமலை மாவட்ட சட்டப்பணிகள் குழு வழங்கிய சமரசம் தீர்வாகவில்லை என்ற கடிதம் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடன் கணக்கு பேரேடு **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வங்கி பணியாளர் அடையாள அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாவில் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.